VANAVARAYAR
INSTITUTE OF AGRICULTURE
ENRICHING INDIA

உழவர் சிந்தனைக் களஞ்சியம்

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

ஜூலை 2017 மலர் 1 இதழ் 2





## வாணவராயர்
## வேளாண்மைக் கல்வி நிறுவனம்

மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

மலர் 1 ✤ ஜூலை 2017 (ஆணி - ஆடி) ✤ இதழ் 2

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>மணக்கடவு, பொள்ளாச்சி – 642 103 |
| நிறுவனர் | : | அருட்செல்வர் முனைவர் **நா. மகாலிங்கம்** |
| | | முனைவர் **ம.மாணிக்கம்**<br>தலைவர் என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி |
| ஊக்கம் | : | திருமதி. **கி. கற்பகவள்ளி ராஜ்குமார்**<br>தாளாளர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்<br>பொள்ளாச்சி |
| | | முனைவர் **சி. இராமசாமி,** பி.எச்.டி.,<br>செயலர், என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி |
| | | முனைவர் **மு. பாலுசாமி,** பி.எச்.டி., முதல்வர் (பொறுப்பு),<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்,<br>மணக்கடவு, பொள்ளாச்சி |
| ஒருங்கிணைப்பாளர் | : | திரு. **கா. காளிதாஸ்,** உதவி பேராசிரியர்<br>வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்,<br>பொள்ளாச்சி |
| தொகுப்பு | : | திரு. **ல. சுந்தரமூர்த்தி**<br>முனைவர். **சி. கிருஷ்ணமூர்த்தி**<br>முனைவர். **கா.சங்கரி**<br>முனைவர். **ந. காளீஸ்வரி**<br>செல்வி **மு. பவித்ரா**<br>உதவி பேராசிரியர்கள்<br>திரு. **பா. ஹரிபிரசாத்** – விரிவுரையாளர் |
| வடிவமைப்பு | : | திரு. **வெ. பிரவீன்கார்த்திக்** – விரிவுரையாளர் |

# சாதனையாளர் திரு. T. திருவேங்கடம், பெரும்பதி

**தலைவர் – பசுமை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்**
**தலைவர் – தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பு**
**தலைவர் – பசுமை உழவர் மன்றம்**

பதி என்றால் மலைவாழ் மக்கள் மிகுந்த கிராமம் என்று பொருள். பெரும்பதி என்றால் அதிக அளவு மலைவாழ் மக்கள் மிகுந்த கிராமம் என்பதாகும்.

2007-ம் ஆண்டுவரை பெரும்பதி கிராம மலைவாழ் மக்கள் வேட்டையாடுதலைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். வாழ்க்கைக்கு ஆதாரமாக எந்தச் சூழலும் இல்லை. எங்கு பார்த்தாலும் தரிசு நிலங்கள் தான் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு குக்கிராமத்தில் தான், 2008-ம் ஆண்டு திரு. T. திருவேங்கடம் அவர்கள் "பசுமை உழவர் மன்றம்" என்ற அமைப்பினை நெபார்டு வங்கியின் உதவியுடன் ஆரம்பித்தார். அப்போது பெரும்பதி கிராமத்தின் மக்கள் தொகை வெறும் 700 தான். 400 முதல் 500 வரை கால்நடைகள் இருந்தன. 100 முதல் 150 லிட்டர் வரையே பால் உற்பத்தியானது.

"பசுமை உழவர் மன்றம்" துவக்கிய பின், 2009-ம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் மற்றும் நெபார்டு வங்கியின் உதவியுடன் குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள "ஆனந்த்" நிறுவனத்தைச் சார்ந்த 'அமுல்' பால் பண்ணை மூலம், இக்கிராமத்தைச் சார்ந்த 25 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு குறித்த பயிற்சியை அளித்தார்.



இந்தப் பயிற்சிக்குப்பின், ஒவ்வொரு விவசாயியும் 1 முதல் 2 ஏக்கர் வரை தென்னையில் ஊடுபயிராக பசுந்தீவனங்களை பயிரிட்டனர். 2009-ம் ஆண்டு, தமிழ்நாடு கால்நடைப் பல்கலைகழக துணைவேந்தர் முனைவர், தங்கராஜ் அவர்கள் பெரும்பதி கிராமத்தினை "பசுந்தீவன உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த கிராமம்" என்று தீர்மானம் நிறைவேற்றிச் சென்றுள்ளார். மேலும் இப்பெரும்பதி கிராமத்திற்கு, வேளாண்மை அறிவியல் நிலையம், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் இலவச பசுந்தாழ் கரணைகள் வழங்கினர். வடக்கிபாளையம் யூனியன் வங்கி கால்நடைகள் வாங்க நிதிஉதவி வழங்கினர். மேலும் சொக்கனூர் சென்ட்ரல் வங்கியும் நிதிஉதவி வழங்கியது. இதன்மூலம் தற்போது 400 முதல் 500 வரை கால்நடைகள்

எண்ணிக்கை உயர்ந்து, அதனால் பால் உற்பத்தியும் 1500 லிட்டர் வரை கிடைக்கிறது. இதனால் பெரும்பதி கிராமம் பெரிதும் பயன் அடைந்து "பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த கிராமம்'' என்ற பெயரையும் பெற்றுள்ளது. மேலும் தமிழ்நாடு வேளாண்மைத் துறையானது, உளுந்து துவரை போன்ற பயிர்வகைகளை 50 சதவீதம் மானியத்தில் இக்கிராமத்திற்கு வழங்கியது. 2010-ம் ஆண்டு "இஃப்கோ" உர நிறுவனம் பெரும்பதி கிராமத்தினைத் தத்து எடுத்து 2012-ம் ஆண்டு விர்பேக் மும்பை (கால்நடை பாதுகாப்பு நிறுவனம்) இந்த கிராமத்தினைத் தத்து எடுத்து தேவையான தொழில் நுட்பங்களை வழங்கி பால் உற்பத்தியினை அதிகரிக்க உதவியது. மேலும், வருடத்திற்கு ஒருமுறை கன்று ஈனும் அளவிற்கு கால்நடை உணவுகளையும், பயிற்சிகளையும் வழங்கினர். SKM கால்நடை உணவு நிறுவனமும் வருடத்திற்கு இருமுறை கருத்தரங்கினை நடத்தி உதவிகளை வழங்கி வந்தன. மேலும், மாட்டுச்சாணத்தினைக் கொண்டு இக்கிராமத்தில் 40 சோலார் கேஸ் இணைப்பினை KVYC நிறுவனத்தின் மூலம் மானிய அடிப்படையில் நிறுவப்பட்டன. இதனால் வருடத்திற்கு 3 இலட்சம் வரை இக்கிராமத்திற்கு எரிவாயுச் செலவு மிச்சமாகிறது. சோலார் கேஸின் கழிவினைக் கொண்டு மண்புழு உரம் தயாரித்தல், களை கட்டுப்படுத்துதல் போன்ற முறைகளையும் செய்து வருகின்றனர். இதனால் செலவும் மிச்சமாகிறது.

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை 35 இலட்சம் ரூபாய் செலவில் 5 தடுப்பணைகளைக் கட்டி பெரும்பதி கிராமத்திற்கு வழங்கியுள்ளது. 2011-ம் ஆண்டு டாக்டர். மகாலிங்கம் பொறியியல் தொழிற்நுட்பக் கல்லூரி மற்றும் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை (DST) இணைந்து இலவச சோலார் உலர்கலன் அமைத்துத் தந்துள்ளது. இதன் மதிப்பு ரூபாய் 3 இலட்சம்ஆகும். இதில் கொப்பரை, நிலக்கடலை, மிளகாய், பருப்பு வகைகள், கோகோ, மக்காச் சோளம், சோளம் போன்றவைகளை உலர வைக்கலாம். மேலும், நெபார்டு வங்கி மணக்கடவு வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியுடன் இணைந்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினை ''பசுமை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்'' என்ற பெயரில் இவ்வாண்டு அமைத்துள்ளது. 5 முதல் 7 கிராமங்களை உள்ளடக்கிய இந்த அமைப்பில் தற்போது 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினராக உள்ளனர். பெரும்பதி திரு. T. திருவேங்கடம் அவர்களின் சீரிய செயல்களைப் பாராட்டி கீழ்க்கண்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2009-''சிறந்த உழவர் மன்றம்'' (நெபார்டு வங்கி)

2010-''சிறந்த பண்ணையாளர் (தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம்)

2011-''சிறந்த உழவர் மன்றம்'' (தமிழ்நாடு அரசு)

2013-''சிறந்த உழவர் மன்றம்'' (நெபார்டு வங்கி)

*2014-"மாவட்ட அளவில் சிறந்த விவசாயி" (மலரும் வேளாண்மை)*

*2015-''சிறந்த பண்ணையாளர்'' (தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம்)*

இந்த விருதுகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ''சிறந்த பண்ணையாளர் விருதை'' வழங்கி திரு. T. திருவேங்கடம் அவர்களை கௌரவித்தது. இந்நிகழ்ச்சியானது செப்டம்பர் 19ஆம் தேதி ஈரோட்டில் நடைபெற்ற கால்நடை கண்காட்சியில் கால்நடைதுறை அமைச்சர் திரு. பி. கிருஷ்ணரெட்டி, சுற்றுசூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பண்ணன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழக துணைவேந்தர் முனைவர். திலகர், ஈரோடு மாவட்ட ஆட்சியர், மற்றும் ஈரோடு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் பெற்று கொண்டார். இத்துணை விருதுகளுக்கும் சொந்தக்காரரான பெரும்பதி திரு. T. திருவேங்கடம் அவர்களை "உழவர் சிந்தனை களஞ்சியம்'' மனதாரப் பாராட்டுகிறது.

தகவல்: B.ஹரிபிரசாத்,<br>விரிவுரையாளர், VIA.

# பந்தல் வகைப் பயிரைத் தாக்கும் நோய்களும் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளும்

முனைவர். **ந. காளீஸ்வரி**
உதவிப் பேராசிரியர்
முனைவர். **இரா. இராஜேந்திரன்**
பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் பாதுகாப்பு துறை

**அடிச்சாம்பல் நோய்**

**அறிகுறிகள்**

இந்நோயானது தேமல் நோயை போன்றே இளம் பச்சை நிற பகுதிகளுடன், அடர் பச்சை நிற பகுதிகள் இலையின் மேற்புறத்தில் தோன்றும்.

மழைக் காலத்தின் பொழுது, கீழ்ப்புறத்திலும், மங்கிய ஊதா நிறப் பூஞ்சாண் வளர்ச்சி காணப்படும்

நோயின் இறுதியில் இலை முழுவதுமாக விரைவில் காய்ந்து விடும்



**கட்டுப்படுத்தும் முறைகள்**

பயிர் இடைவெளி அதிக அளவும், நன்றாக நீர் வடியக்கூடியதாகவும், காற்றோட்டமாகவும், வெயிலில் படுமாறும் உள்ள வரப்பை தயார் செய்ய வேண்டும்.

ரிடோமில் 0.1% (அ) குளோரோதேலோனில் 0.2%, (அ) மேன்கோசெப் என்ற பூஞ்சாணக்கொல்லியை 0.2% தெளிக்க வேண்டும்

**சாம்பல் நோய்**

**அறிகுறிகள்**

அதிக வறண்ட நிலைகளில் இந்த நோய் பரவலாகக் காணப்படும்.

வெள்ளை (அ) பூஞ்சாண் வளர்ச்சி இலையின் மேலும், கீழும் மற்றும் தண்டுகளிலும் காணப்படும்.

தீவிரத் தாக்குதலின் போது, செடிகள் பலவீனமாகி, குட்டை வளர்ச்சியுடன் காணப்படும்.



**கட்டுப்படுத்தும் முறைகள்**

நனையும் கந்தகம் (சல்பர்) 0.1% தெளிக்க வேண்டும்.

நோய் தாக்கப்பட்ட இலைத் தழைகளை நீக்க வேண்டும்

**மஞ்சள் தேமல் நோய் :**

**அறிகுறிகள்:**

இந்நோயானது பெரும்பாலான பூசணி வகை பயிர்களையும் தாக்கும்.

புதிதாக வளர்ந்த இலைகள் கீழ்நோக்கி கிண்ணம் போன்று வளைந்து, இலைகளில் தீவிர தேமலுடன், இளம் பச்சை மற்றும் அடர்பச்சை நிறத் திட்டுக்கள் மாறி மாறிக் காணப்படும்.

செடிகள் குட்டை வளர்ச்சியுடனும், பழங்களில் வெளியே பிசிங்கிய வளர்ச்சியும் காணப்படும். அதிகமாகத் தாக்கப்பட்ட வெள்ளரி பழங்கள் அநேகமாக வெள்ளை நிறத்தில் காணப்படும்.



**கட்டுப்படுத்தும் முறைகள்**

அசுவினிகள் மூலம் இந்நோய் பரவும். பலதரப்பட்ட செடிகளில் உயிர் வாழும்.

நோய் எதிர்ப்புச்சக்தியுள்ள இரகங்களை பயிரிடுவது மற்றும் களைகளை அகற்ற வேண்டும்

பூச்சிக்கொல்லிகளைத் (இமிடேகுளோபிரிட் 1 மிலி/ லிட்டர்) தெளிக்கவேண்டும். ●

# நெற்பயிர்க்கான உழவனின் வேலைபளு குறைக்கும் வேளாண்பண்ணை கருவிகள் மற்றும் இயந்திரங்கள்

பொறியாளர் **அ. சிவகுமார்** & **ந. முத்துக்கண்ணன்**
உதவி பேராசிரியர்கள்,
வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனம்,
மணக்கடவு, பொள்ளாச்சி – 642 103.

முந்தைய காலங்களில் நன்செய் நிலங்களைப் பதப்படுத்தி நெல்சாகுபடி செய்வது கடினமானதாகவும், அதிக கால விரயமும், வேலையாட்களின் தேவையும் அதிகமாக இருந்தது. இதனை கருத்தில் கொண்டு தற்காலங்களில் நெல் சாகுபடி செய்வதில் நவீன பண்ணை இயந்திரங்கள் குறிப்பாக பவர்டில்லர், டிராக்டர் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

இந்த கட்டுரை மண் சீர்படுத்துதலிருந்து அறுவடை வரை பயன்படும் பல்வேறு வேளாண்பண்ணைக்கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பற்றிய விபரங்களை விளக்குகிறது.

**1. மண்சீர்படுத்தும் இயந்திரங்கள்:**
**(சேறுகலக்குதல்)**

நன்செய் நிலங்களில் நாற்றுகள் நடவு செய்வதற்கும்,நீர் பாசனம் செய்த நீர் தேங்கி மண்ணில் ஊடுருவிச் சென்று வீணாகாமல் தடுக்கவும், மேல்மண்ணை நன்றாகச் சேறு கலக்குவது அவசியமாகிறது.

இதனைச் செயல்படுத்துவதற்கு இரும்பு சக்கரங்களை பவர் டில்லர்ருடன் இணைத்து உபயோகபடுத்துவது



சிறந்ததாகும். மேலும் சேற்று நிலத்தில் வேலை செய்வதற்கு ஏற்ற இரும்பு சக்கரங்களுடன் கூடிய பவர் டில்லரை தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் அறிமுகபடுத்தியுள்ளது. இதில் பவர் டில்லரை சேறுகலக்க உபயோகிக்கும் போது, காற்றடைத்த ரப்பர் சக்கரங்களை நீக்கி, இரும்பு சக்கரங்களை பொருத்தவேண்டும் இதன் மூலம் நாட்டு கலப்பையை உபயோகிப்பதை விட சேறுகலக்குதல் ஆழமாகவும், கலக்கப்பட்ட சேறு சமமாகவும் மேலும் நடவுசெய்யப்படும் நாற்றுகள் சீராக நன்முறையில் வளர ஏதுவாகிறது. இதன் மூலம் ஒரு நாளில் .5 முதல்.75 ஹெக்டர் வரையிலான நிலத்தை சீர்படுத்தலாம்.

மேல் கூறப்பட்ட முறைகளை விட நடைமுறையில் பவர்டில்லரில் சுழல்


வொய்ப்புகள் எல்லோருக்கும் பொதுவானது. அதை வசப்படுத்துவது உங்கள் கரங்களில்.

கலப்பையை இணைத்து பயன்படுத்துவதன் மூலம், மண் வேகமாகவும் நன்றாகவும் கலக்கப்பட்டு சேராக மாறுவது எளிதாகிறது. ஆகையால் டிராக்டரைக் கொண்டு இருமுறை சேறுகலக்குவதைவிட பவர்டில்லருடன் கூடிய சுழல் கலப்பை கொண்டு ஒருமுறை சேறுகலக்குவதற்கு சமமாகும்.

**2. விதை நடவு செய்யும் இயந்திரம்: ( நேரடி நெல்விதைப்பு கருவி)**

நன்செய் நில நெல் சாகுபடியில் நேரடியாக விதைத்தலும், நாற்றுவிட்டு நடவு செய்வதும் நடைமுறையில் இருந்துவரும் வழக்கமாகும். குறிப்பிட்ட பயிர் பருவத்தில் நடவு செய்து நெல்பயிரை விளைவிக்கத் தேவையான ஆட்கள் கிடைக்காததாலும், பருவத்தை தவறவிடாமல் சாகுபடி செய்வதற்கும், நெல் நாற்று நடுவதற்கும் அதிகமான வேலை ஆட்கள் தேவைப்படுவதால் ஏற்படும் செலவைக் குறைப்பதற்காக நெல் நாற்று நடுவதற்குப் பதிலாக முளைகட்டிய நெல் விதைகளை சேற்று வயல்களில் நேரடியாக விதைக்கும் உத்தி இன்று உழவியல் வல்லுனர்களினால் பரிந்துரைக்கபடுகிறது. இதனால்


நேரடி நெல் விதைப்பான்

பராமரிப்புச் செலவு குறைவதோடு, அறுவடை செய்யும் கால அளவும் குறைகிறது. அத்துடன் விளைச்சலும் அதிகமாக கிடைக்கிறது.மேலும் இந்த முறையில் விதை நடவு செய்வதன் மூலம் ஒரு நாளில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் விதைக்க இயலும்.



மேற்கூறப்பட்ட நேரடி நெல்விதைப்பு முறையினைவிட ஒரு நாளில் 1.75 ஹெக்டர் நிலத்தில் நடவுசெய்வதற்கு டீசல் என்ஜின் மூலம் இயங்ககூடிய யான்ஞ்னி சக்தி நாற்று நாடும் தொழில் நுட்ப இயந்திரத்தை சீனா அறிமுகபடுத்தியுள்ளது. இதற்க்கு பாய் நாற்றங்கால் முறையில் நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு, ஒரே நேரத்தில் எட்டு வரிசைகளில் நடவு செய்யப்படுகிறது. மேலும் ஜப்பான் நாட்டின் யான்மர் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் நாற்று நடவு எந்திரம் மூலம் ஆறு முதல் எட்டு வரிசைகளில் ஒரே நாளில் நான்கு ஹெக்டர் நடவு செய்யலாம்.

**3. களைநீக்கும் இயந்திரம்: ( கோனோ வீடர்)**

முந்தைய காலங்களில் குனிந்து கொண்டே கையினால் களை எடுப்பதால் வேலையாட்கள் விரைவில் களைப்படைந்து விடுவதுடன்



குறிப்பிட்ட நேரத்தில் குறைந்த பரப்பளவே களை எடுக்க முடிகிறது.

இன்றைய காலத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டின் பன்னாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள கோனோ வீடர் பயன்படுத்துவதன் மூலம் அதிக பரப்பளவைக் குறைந்த செலவு மற்றும் குறைந்த நேர அளவில் வரிசையாக நடவு செய்த வயல்களில் இருவரிசைகளில் எளிதாகப் பயன்படுத்தலாம். இதன் வேலைத்திறன் ஒரு நாள் ஒன்றிக்கு 0.2 ஹெக்டர் மட்டுமே, எனவே வேலைத்திறனை அதிகப் படுத்துவதற்கு இரண்டு வரிசைகளில் ஒரே நேரத்தில் களை எடுக்கும், விரல் வடிவ சுழலும் களை எடுக்கும் கருவி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இந்த கருவியைப் பயன்படுத்தி 3 செ.மீ வரை உயரமுள்ள நெற்பயிரில் ஒரு நாளில் 0.35 ஹெக்டர் நிலப்பரப்பில் களை எடுக்கலாம்.

**4. பயிர் பாதுகாப்பு இயந்திரங்கள்: (விசைத் தெளிப்பான் மற்றும் மின்கல முறை தெளிப்பான்)**

நெற்பயிரில் இலை, தண்டு மற்றும் கதிர்ப் பகுதிகளை பூச்சிகள் மற்றும் நோய்களிலிருந்து பாதுகாத்து விளைபொருள்களை சேதமில்லாமல் சந்தைப்படுத்த, திரவ மருந்து தெளிப்பதற்கும் மற்றும் தூள் மருந்து தூவுவதற்கும் இன்று பலவகையான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் திரவமருந்து தெளிப்பதற்கென விசைதெளிப்பான் 1.2 முதல் 1.7 குதிரைதிறன் கொண்ட வகையில் அறிமுகப்படுத்தப்படுள்ளது. இதன் மூலம் குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில், கைதெளிப்பான்களால் தெளிப்பதைவிட நுண்ணிய துளிகளாக செடிகளின் அனைத்து பாகங்களுக்கும் தெளிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி ஒரு நிமிடத்திற்கு 0.5, 1.0, 1.5, மற்றும் 2. லிட்டர் என்ற வகையில் திரவ மருந்து தெளிக்கப்படும் அளவை பயிர்களின் வகைக்கு ஏற்பவும், வளர்ச்சிக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளலாம்.



விசைத் தெளிப்பான்

விசைத்தெளிப்பானை பயன்படுத்துவதற்கு பெட்ரோல் செலவு மற்றும் பராமரிப்புச் செலவு



மின்கல முறை தெளிப்பான்

அதிகமாவதைக் கருத்தில்கொண்டு பிரித்தெடுத்தல், தூற்றுதல், பதர் நீக்கிய மணிகளைக் கோணிப்பைகளில் சேகரித்தல் ஆகிய வேலைகளை ஒருங்கே செய்யும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளதால் ஏராளமான நேரமும், அறுவடை செய்யும் செலவும், சேதாரமும் தவிர்க்கபடுகிறது. இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி நீர் தேங்கியுள்ள வயல்களிலும்அறுவடை செய்வது எளிதானதாகும். ●

# சீறிப்பாயும் காங்கேயம் காளை

**ச. பிரீத்தி, கோ. விவேக்**
இளநிலை இறுதியாண்டு
**முனைவர் S. அருள்** M.V. Sc., Ph.D.,
உதவிப் பேராசிரியர்,
வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி, மணக்கடவு, பொள்ளாச்சி – 642 103.

தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா. ஆம் தமிழர்களின் இரு கண்கள் வீரமும், காதலும். தமிழர்களின் வீரத்தை பறைசாற்றுவது ஜல்லிக்கட்டு. ஜல்லிக்கட்டு என்றவுடன் நமக்கு நினைவிற்கு வருவது காங்கேயம் காளை.



## காங்கேயம் காளையின் பிறப்பிடம் மற்றும் தனித்துவம்

இம்மாட்டினங்கள் தமிழ்நாட்டின் ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள காங்கேயம், தாராபுரம், பெருந்துறை, பவானி மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் வட்டங்களின் ஒரு பகுதியிலிருந்து தோன்றியவை. திரு. நல்லதம்பி சர்க்கார் மன்றாடியார் மற்றும் பாளையங்கோட்டையின் தெய்வத்திரு. பட்டோகர் போன்றோரின் முயற்சியால் இம்மாட்டினங்கள் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. பிறக்கும் போது இம்மாட்டினங்களின் தோல் சிவப்பு நிறமாக இருந்து பின் ஆறுமாத வயதில் சாம்பல் நிறமாக மாறிவிடும். காளை மாடுகள் சாம்பல் நிறத்துடன் கூடிய முதுகுப்பகுதியையும், முன்னங்கால்களையும், பின்னங்கால்களையும் கொண்டவை. வண்டியிழுக்கும் காளைகள் சாம்பல் நிறத்துடன் காணப்படும். பசு மாடுகள் சாம்பல் மற்றும் வெள்ளை நிறத்துடன் காணப்படும். ஆனால் இவ்வினத்தினைச் சேர்ந்த சில மாடுகள் சிவப்பு, கருப்பு, பழுப்பு மற்றும் பல நிறங்களை கலந்த கலவையுடன் கூடிய தோலைக் கொண்டிருக்கும். இவற்றின் கண்கள் அடர்த்தியான நிறத்துடன் அவற்றை சுற்றி கருவளையங்கள் காணப்படும். கொம்புகளின் அடிப்பகுதி அகன்றும், நுனி பகுதி குறுகி கூர்மையாகவும், வெளிப்புற மற்றும் உட்புறமாக வளைந்து அரைச்சந்திரன் அல்லது கதிர் அரிவாள் வடிவில் இருக்கும். காரி மாடுகள் (கருப்பு), மயிலை (வெள்ளை), செவலை மாடுகள் (செம்மையாகவும்) இருக்கும்.

## கண்ணபுரம் தேர்த்திருவிழா

ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் திருப்பூர் மாவட்டம், கண்ணபுரத்தில் மாரியம்மன் கோயில் திருவிழா

நடைபெறும். அப்போது ஆயிரக்கணக்கான காங்கேயம் மாடுகள் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும். வியாபாரிகள், விவசாயிகள் காளை மற்றும் கறவை மாட்டை ஆர்வமுடன் வாங்கிச் செல்வார்கள். வறட்சி மற்றும் தீவனம் பற்றாக்குறையாக உள்ள சூழ்நிலையிலும் 15000 மாடுகள் விற்கப்பட்டுள்ளன. இவை பொதுமக்களிடையே ஆர்வத்தை தூண்டுவதாக அமைந்தது.

அழிந்துவரும் காங்கேயம் கால்நடைகளைக்காக்கவும், பொதுமக்களிடையே காங்கேயம் கால்நடைகளைப்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஒவ்வொரு ஆண்டும் சமத்தூரில் கொங்குநாடு கால்நடைத் திருவிழா நடத்தப்படும்.

**தீவன பராமரிப்பு**

அறிவியல் ரீதியிலான உணவு மற்றும் மேலாண்மை போன்றவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அம்சங்களாக உள்ளன. நாள்தோறும் மக்காச்சோள மாவு 1/2 கிலோ, நெல்மாவு 1/2 கிலோ, பருத்தி விதைகள் 1/2 கிலோ தண்ணீரில் ஊறவைத்து அளிக்க வேண்டும். மாடுகள் மேய்ச்சலுக்கு செல்லும் இடத்தில் அங்கிருக்கும் கல் தொட்டிகள் தண்ணீர்த் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. வேலிகளில் இருக்கும் கிளுவை மர இலைகள், அவற்றில் படர்ந்திருக்கும் கோவைச் செடி, உரிக்கா கொடி, படத்தலான் கொடி, மிஸ்டக் கொடி ஆகியவற்றை மாடுகள் விரும்பி உண்ணுகின்றன.

**ஜல்லிக்கட்டு**

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த சல்லிக்காசு என்னும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அடக்கும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் சல்லிக்கட்டு என்று மாறியது. பேச்சுவழக்கில் அது திரிந்து ஜல்லிக்கட்டு ஆனது என்றும் கூறப்படுகிறது.

ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டில் மாட்டுப் பொங்கல் அன்று நடைபெறும் ஒரு நிகழ்வு ஆகும். இதில் கிராமத்து இளைஞர்கள் கலந்து கொண்டு தமது வீரத்தை வெளிப்படுத்துவார்கள். ஜல்லிக்கட்டு நடைபெறுவதால் நாட்டு மாடுகளின் இனங்கள் பாதுகாக்கபட்டு வந்தன. இது தமிழ்நாட்டின் முல்லைப் புவியியல் பிரிவில் வாழ்ந்த பண்டைய பழங்குடியினர் மத்தியில் பரவலாக இருந்தது.

ஏறுதழுவல், ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும், மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படும். இவ்விளையாட்டு மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், அவினயாபுரம் மற்றும் பாலமேடு என்னும் ஊர்களிலும், புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை மற்றும் தேனிமலை, தேனி மாவட்டம் போன்ற ஊர்களிலும் ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப் பெறுகின்றன.

### கொரங்காடு மேய்ச்சல் தரை

ஆரம்ப காலத்தில் தமிழகத்தில் ஈரோடு, கரூர், திண்டுக்கல், தாராபுரம் பகுதிகளில் மழை குறைவாகவுள்ள வறண்ட நிலங்கள், பழமை வாய்ந்த கொரங்காடு மேய்ச்சல் நிலங்கள் என அழைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. விவசாயம் செய்யும் அளவிற்கு மழை இல்லாத காரணத்தால் கால்நடைகள் மேய்ச்சலுக்காக பயன்படுத்தப்பட்டன. சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட கிராமங்களில் ஐம்பதாயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் இந்த மேய்ச்சல் தரை அமைக்கப்பட்டு நாட்டு கால்நடைகளான "காங்கேயம்" இன மாடுகள், "மேச்சேரி" இன ஆடுகள் இந்நிலங்களில் மேய்க்கப்பட்டு வருகின்றன. கால்நடை பண்ணையாளர்கள் தங்களது நிலங்களில் முள்ளு கிளுவை வேலியமைத்து கொழுக்கட்டைப்புல், நரிப்பயறு ஆகிய விதைகளை விதைத்து சரியான இடைவெளியில் வெள்வேல் மரங்கள் நடப்பட்டு மேய்ச்சல் தரைகள் அமைப்பார்கள். கால்நடைகளிலிருந்துப் பெறப்படும் கழிவுகளிலிருந்து நிலத்தின் வளமும் மேம்படுத்தப்படும். மாடுகள் இயற்கையான சூழலில் வளர்க்கப் படுவதால் அவற்றின் பாலில் நோய்களைக் குணப்படுத்தும் தன்மை அதிகமாக உள்ளது. நல்ல கறவை மாடுகள் உச்ச கறவை காலத்தில் 3 முதல் 4 லிட்டர் பால் நாள் ஒன்றுக்குத் தருகின்றன.

### மாடு அல்ல மற்றையவை

பெற்ற தாயை அடுத்து இரண்டாவது தாயாக பூமியையும், மூன்றாவது தாயாக பசுவையும் பார்ப்பது நமது பாரம்பரிய வழக்கமாகத் தொடர்கிறது. மாடுகள் கலப்பை கொண்டு பூமித்தாயின் தலைகோதி வந்தன. பூச்சி வந்து விட்டால் கவலை வேண்டாம், பஞ்சகவ்யா தயாரித்து விடலாம். கொம்பு சாணம் விவசாயத்தில் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அதில் உள்ள தாது உப்புகள் மண்ணை வளமாக வைத்துக் கொண்டிருந்தது. மாட்டின் சிறுநீரையும், சாணத்தையும் கொண்டு எவ்வித இரசாயன பொருட்களும் இல்லாமல் குழிக்கு 71 படி அரிசி விளைவித்தான் தமிழன்.

பிரேசிலில் காங்கேயம் மாடு ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போனது யாருக்குத் தெரியும்? பசுவதைக் கூடத்தில் மணிக்கு பத்தாயிரம் மாடுகள் இறப்பது யாருக்குத் தெரியும்? தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டதால் 70000 மாடுகள் கேரளாவிற்கு அடிமாடுகளாக கொண்டு செல்லப்பட்டது. பாமரத் தமிழனோ அன்று மாட்டையும் தன்னுடன் சேர்த்து குடும்ப புகைப்படம் எடுத்தான். ஆனால் தற்போதைய நிலை நீடித்தால் மாட்டை பிற்காலத்தில் புகைப்படத்தில் மட்டும் பார்க்க முடியும். இந்நிலையை மாற்ற எழுந்து நில், தமிழனாக அல்ல, உழவனாக. ●

# எலுமிச்சையின் மருத்துவ மகிமைகள்

A. அக்ஷயா
இறுதியாண்டு இளநிலை

நமது நாட்டில் அனைத்து நல்ல காரியங்களிலும் முதல் இடம் வகிக்கும் பழம்தான் எலுமிச்சை. இது உலகெங்கும் நிறைந்து காணப்படும் பழமாகும். குறைந்த விலையில் எல்லா சத்துக்களும் நிறைந்த பழங்களில் எலுமிச்சையும் ஒன்று. மனிதர்களுக்கு ஏற்படும் பலவித நோய்களை குணமாக்கும் சர்வ ரோக நிவாரணியாக பல சத்துக்கள் எலுமிச்சம் பழத்தில் அடங்கியுள்ளது. எலுமிச்சை பழம் புளிப்பு சுவை கொண்டது. எலுமிச்சை பழத்தை அன்றாட உணவோடு ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தி வந்தால் ஜீரண சக்தி அதிகமாகும். நல்ல பசி எடுக்கும். இத்தகைய மருத்துவ மகிமைகள் நிறைந்த எலுமிச்சையின் மருத்துவ குணங்களை இங்கு காண்போம்.

**மருத்துவ மகிமைகள்:**

➢ இஞ்சிச்சாறு, வெங்காயச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு சம அளவு கலந்து 2 மேசைக்கரண்டி தினமும் 2 வேளை 5 நாட்கள் சாப்பிட்டால் ஆஸ்துமா இருமல் குணமாகும்.

➢ உடலின் நரம்பு மண்டலத்திற்கு வலிமையை ஊட்டமளிக்கக் கூடிய ஆற்றல் எலுமிச்சம் பழத்திலுள்ள பாஸ்பரஸ் என்ற ரசாயனப் பொருளுக்கு உண்டு. இது மட்டுமின்றி நரம்புகளுக்குப் புத்துணர்ச்சியையும் தெம்மையும் அளிக்கிறது.



➢ எலுமிச்சம் பழத்தில் உள்ள மற்றொரு ரசாயனப் பொருளான 'பொட்டாசியம்' இரத்தத்தின் அமிலத்தன்மையைக் கட்டுப்படுத்துவதுடன் நரம்புத் தளர்ச்சியடையாமல் காக்கிறது. மற்ற எந்த பழத்தையும் விட எலுமிச்சை பழம்தான் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய பிணிகளுக்குச் சரியான மருந்தாக உதவுகிறது.

➢ படர்தாமரை நோய்க்கு வெண் சந்தனக்கட்டையை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து பூசலாம். சீமை அகத்தி இலையை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பூசலாம்.

➢ எலுமிச்சைபழத்தில் உள்ள 'சிட்ரஸ்' அமிலம் நோய் எதிர்ப்பு சக்தி

நிறைந்ததாக இருப்பதால் சளி, இருமல், தொண்டை வலி போன்றவைகளுக்கு நல்ல மருந்தாகிறது. எலுமிச்சை சாறுக்கு பித்த நீரை சுரக்கும் தன்மை உண்டு. அதனால் காமாலை நோய்களுக்கும் இது மருந்தாக பயன்படுகிறது.

- மலச்சிக்கல் உள்ளவர்கள் காலை எழுந்தவுடன் இளம் சுடுநீரில் எலுமிச்சை சாறு கலந்து பருகி வந்தால் மலச்சிக்கல் நீங்கும். உடல் புத்துணர்ச்சி பெறும்.
- எலுமிச்சை பழ விதைகளுடன் மிளகு தூள் கலந்து தண்ணீர் விட்டு மாவாக்கி எலுமிச்சம்பழ இரசத்தையும் அத்துடன் ஊற்றிக் கலந்து தலையில் தேய்த்துவிடவும். இம்மாதிரியாக சில காலத்திற்கு உபயோகித்து வந்தால் முடி நன்றாக வளர்ச்சி அடையும்.
- ரத்தப்போக்கை தடுத்து நிறுத்தும் சக்தி எலுமிச்சைசாறுக்கு உள்ளதால் மூக்கில் ரத்தம் வடிதல், மூலநோயில் உண்டாகும் ரத்தக்கசிவு போன்ற நிலைகளில் இது பலனளிக்கிறது.
- கோடை காலங்களில் ஏற்படும் தாகத்தை தணிக்க எலுமிச்சை பழம் பயன்படுகிறது.
- ஒரு கப் சூடான காபி அல்லது தேநீரில் ஒரு எலுமிச்சம் பழத்தை பாதியாக நறுக்கி, அரைமூடியை பிழிந்து சாறு கலந்து அருந்தி வந்தால் தலைவலி குணமாகும்.
- எலுமிச்சை பழத்தை பிழிந்து சாறெடுத்து, அதில் தேன் கலந்து பருகி வந்தால் கல்லீரல் பலப்படும்.
- எலுமிச்சம் பழத்தை பிழிந்த சாற்றில் ஒரு தேக்கரண்டி அளவு சீரகத்தையும், அதே அளவு மிளகையும் கொஞ்சம் கலந்து வெயிலில் காயவைத்து காய்ந்தபின் நன்றாக பொடித்து எடுத்து பாட்டிலில் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும். காலை, மாலை இருவேளையும் இதில் அரை தேக்கரண்டி அளவு வாயிலிட்டு வெந்நீர் குடித்து வந்தால் பித்தம் குறையும்.
- எலுமிச்சம் பழம் உடலில் களைப்பை போக்கி உடலுக்கு புத்துணர்வை உண்டாக்கும்.
- எலுமிச்சம் பழச் சாறை, உடலில் தேய்த்து குளித்தால் உடல் வறட்சி நீங்கும்.
- தாதுவைக் கெட்டிப் படுத்தும்.
- உடல் நமைச்சலைப் போக்கும்.
- மாதவிலக்கின் போது உண்டாக்கும் வலியைக் குறைக்க இதன் சாறு உதவும்.
- எலுமிச்சை ஜூஸை தினமும் டயட்டில் சேர்த்து வந்தால், உடல் எடை குறையும். ஏனெனில் இதில் உள்ள கொழுப்புகளை கரைத்து, உடலுக்கு ஒரு நல்ல வடிவத்தை கொடுக்கும்.
- செரிமானப் பிரச்சனை, வாயுப்பிரச்சனை போன்றவை உள்ளவர்கள், எலுமிச்சை சாற்றை சூடான நீரில் கலந்து குடித்து வந்தால், சரிசெய்து விடலாம். வேண்டுமெனில் ஓமத்தை எலுமிச்சை சாற்றில் சேர்த்து குடித்தாலும், செரிமானப் பிரச்சனையை சரிசெய்யலாம்.

- எலுமிச்சை ஜூஸை குடித்து வந்தால், இவை உடலில் உள்ள ஆண்டிபயாடிக்கை அதிகரித்து, தொற்று நோய்களை உண்டாக்கும் கிருமிகளை அழித்துவிடும்.
- எலுமிச்சையின் ஒரு சிறந்த, யாருக்கும் தெரியாத நன்மை என்று சொன்னால் அது எலுமிச்சை இரத்த அழுத்தத்தை குறைக்கும் தன்மையுடையது, என்பது தான். அதுமட்டுமின்றி, அவை உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலின் அளவை குறைத்து, நல்ல கொலஸ்ட்ராலின் அளவை அதிகரிக்கும்.
- பெண்கள் எலுமிச்சை சாற்றை அதிகம் குடித்தால், எலுமிச்சையில் இருக்கும் கார்சினோஜென் பெருங்குடல், புரோஸ்ட்ரேட் அல்லது மார்பகப் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும்.
- மேலும் எலுமிச்சை ஜூஸ் உடலில் உள்ள டாக்ஸின்களை வெளியேற்றி, பொலிவற்று இருக்கும் சருமத்தை பொலிவாக்கும்.
- எலுமிச்சை சருமம் மற்றும் கூந்தலுக்கு மிகவும் சிறந்தது. குறிப்பாக சருமத்தில் பருக்கள் இருப்பவர்கள் பயன்படுத்தினால், விரைவில் அதனை நீக்கலாம். மேலும் பொடுகுத் தொல்லை மற்றும் இதர கூந்தல் சம்பந்தமான பிரச்சனைகள் உள்ளவர்கள் பயன்படுத்தினாலும், அந்த பிரச்சனையை தடுக்கலாம்.
- மேலும் இதிலுள்ள ஆண்டி ஆக்ஸிடன்கள் சருமத்தில் ஏற்படும் சுருக்கங்களால் உண்டாகும் முதுமைத் தோற்றத்தை தடுக்கும். ●

# செங்காந்தள் - மூட்டுவலியின் எதிரி

**அ. தமிழரசி**
நான்காம் ஆண்டு மாணவி
**முனைவர் சி. கிருஷ்ணமூர்த்தி**
உதவி பேராசிரியர்

**மூட்டு வலி:**

முன்பெல்லாம் கால்வலி, மூட்டு வலி என்று பெரியவர்கள் தான் புலம்புவார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் முப்பது வயதைக் கடந்து விட்டாலே அனுபவத்தை விட இது போன்ற வலிகள் தான் அதிகம் வருகின்றன. தற்போதைய உணவுமுறை அதிக உடல் எடை போன்றவற்றால் இளம் வயதுடைய இளைஞர்களுக்குக் கூட மூட்டுவலி வர அதிக வாய்ப்பு உள்ளது. உடல் எடை அதிகமாக இருப்பதே பெரும்பாலானவர் களுக்கு மூட்டுவலி வருவதற்கான முக்கிய காரணமாகும். கால்சியம் சத்துக்குறைவு, நோய் எதிர்ப்புத் தன்மை இல்லாமை உடலில் தோன்றும் ரசாயணமாற்றங்கள், இளம் வயதில் உடற்பயிற்சி செய்யாமை போன்றவையும் மூட்டுவலிக்கு முக்கிய காரணமாகும்.

**அறிகுறிகள்:**

மூட்டுவலித்தாலே அது மூட்டு வலி என்று நினைத்துக் கொள்ள கூடாது, மூட்டுக்களில் கடுமையான வலியும், வீக்கமும், காணப்படும், மூட்டுகள் உஷ்ணமாக இருக்கும்.

மூட்டுவலி ஏற்பட்டால் உடல் சோர்வு, அதிக காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

மூட்டுவலிக்கு உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் அவ்வாறு இல்லையெனில் மூட்டுவலி தீவிரமடையும் பிறகு கால்களை நீட்டக் கூட முடியாத நிலை ஏற்படலாம்.

இந்த மூட்டுவலிக்கு எதிரியாக இருப்பது செங்காந்தள் தாவரமாகும்.

**காந்தள் (பேரினம்):**

காந்தள் (Gloriosa) என்பது ஒரு கொல்சிகேசியே (Colchicaceae) தாவர குடும்பத்தைச் சார்ந்த, 12 இனங்களையுடைய பேரினம் ஆகும். இது ஒருவித்திலை (Monocotyledons) தாவரவகையினைச் சேர்ந்ததாகும்.

காந்தள் நம் தமிழ் நாட்டின் மாநில மலராக கூறப்படுகிறது. இது ஆப்ரிக்காவை பூர்வீகமாகக் கொண்டுள்ளது. ஜிம்பாபேயின் தேசிய மலர் ஆகும்.

இது ஐரோப்பிய நாடுகளில் கௌட் எனும் மூட்டுவலி நிவாரணத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. இத்தாவரத்தின்



மலர்கள் முதலில் பச்சை மஞ்சள் நிறத்திலிருந்து ஆரஞ்சு சிவப்பு மற்றும் சில நேரங்களில் சிவப்பு வண்ணமாகவும் காணப்படுகிறது. பூவின் நிறம் இரு வேறாக மாறுபடுவதால் இதனை வெண்காந்தள், செங்காந்தள் என்ற இருவேறு பெயர்களில் வருணிப்பார்கள்.

இத்தாவரம் தமிழ் நாட்டில் அதிமாக கரூர், சேலம், ஈரோடு போன்ற மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. இம்மாவட்டங்களில் சுமார் 6000 - 7000 ஏக்கர் நிலப்பரப்பில் செங்காந்தள் பயிரிடுகிறார்கள். இத்தாவரத்தின் கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்றும், கணுக்களில்லாததைப் பெண்காந்தள் என்றும் கூறுவார்கள்.

**இத்தாவரத்தின் பெயரம்சம்**

இத்தாவரத்தின் பூ தீக்கொழுந்து போலக் காணப்படுவதால் அக்கினிசலம் என்கிறார்கள்.

இத்தாவரத்தின் கிழங்கு கலப்பை வடிவமாக இருப்பதால் கலப்பை கிழங்கு என்றும் அழைக்கப்படுகிறது.

இலைகளின் முனை சுருண்டு காணப்படுவதால் தலைச்சுருளி என்றும் அழைக்கப்படுகிறது.

இத்தாவரம் வளைந்து பற்றுவதால் கோடல், கோடை என்றும் அழைக்கப் படுகிறது.

இத்தாவரம் கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப் பூ என்றும் அழைக்கப்படுகின்றது.

நாட்டு மருத்துவத்திலே இதனை வெண்தோண்டி எனவும் அழைப்பர்.

**மருத்துவ பயன்கள்:**

சுபர்பின் (Superbin) மற்றும் கோல்சிசின் (Colchicin) ஆகிய மருந்துப் பொருட்கள் இக்கிழங்கில் இருந்து பெறப்படுகின்றன.

காந்தள் தாவரத்தின் கிழங்கு, இலை, விதை ஆகியவை அதிக மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலை - வயிற்றுப்புண், மூலநோய், போன்றவற்றினைக் குணப்படுத்தும் மருந்துகள் இலைகளில் இருந்து பெறப்படுகின்றன.

விதை - புற்று நோயை குணப்படுத்தும் மருந்துக்கள் விதைகளிலிருந்து பெறப்படுகின்றன.

கிழங்கு - நேரடியாக இத்தாவரத்தின் கிழங்கினை உட்கொண்டால் நஞ்சாகும். சிறிதளவு உட்கொண்டாலும் முடி உதிரும்.

செங்காந்தள் செடியின் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பல விதமான மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு குறிப்பாக தோலில் உண்டாகும் ஒட்டுண்ணிகளை அழிக்க இதை பற்றுப் போடுவார்கள்.

தேள் கடிக்கு இக்கிழங்கினை அரைத்துப் போடுவார்கள். வாதம், மூட்டுலி, தொழுநோய் போன்றவற்றை குணப்படுத்துவது மட்டுமல்லாமல் பேதி, பால்வினைநோய் போன்ற பல்வேறு நோய்களை குணப்படுத்த சித்த வைத்தியத்தில் மருந்தாகவும் இவை பயன்படுகிறது.

பெண்களுக்கு பிரசவ வலியைத்தூண்டும் மருந்தாகவும், ஆற்றலூட்டும் குடிப்பானாகவும் பயன்படுவது மட்டுமல்லாமல் தலையில் வரும் பேன்களை ஒழிக்கவும் பயன்படுகின்றது.

குடற்புழுக்கள், வயிற்று உபாதைகள் மற்றும் தேள், பாம்புக்கடிகளுக்கு இவை முக்கிய மருந்தாக பயன்படுத்தப் படுகிறது.

அண்மை காலங்களில் கோல்சிசின் மூலப்பொருளைக் காட்டிலும் இரண்டு மடங்கு வீரியமான சோல்ச்சிரோஸைடு கண்டுபிடித்து மூட்டுவலி மருத்துவத்தில் இவை முக்கியமாக பயன்படுத்தப் படுகிறது.

இம்மருந்து அதிகமாக ஐரோப்பிய நாடுகளில்மூட்டுவலி நிவாரணத்திற்கு பயன்படுகிறது. நம் கால்களின் மூட்டுகளில் மிக நுண்ணிய படிவங்களாக யூரிக் அமிலம் படிவதால் தான் மூட்டுவலி ஏற்படுகிறது. எனவே, இம்மருந்தினை உட்கொண்டால் நம் மூட்டுகளில் நுண்ணிய படிவங்கள் படியாமல் பாதுகாக்கப்படுகிறது.

பாம்பின் நஞ்சு, தலைவலி, கழுத்து வலி, வயிற்று வலி ஆகியவற்றை குணப்படுத்தும் தன்மை இவற்றிற்கு உண்டு.

இந்தியாவில் உள்ள ஹரியானா மாநிலத்தில் பாம்பு கடி விஷ முறிவிற்காக இவை முக்கியமாக பயன்படுத்தப் படுகிறது.

அதிக மருத்துவப் பயனுடைய செங்காந்தள் பயிருக்கு சந்தை வாய்ப்புகளும் இருப்பதால் விவசாயிகள் இதனை சாகுபடி செய்து நல்ல லாபத்தை பெறலாம். ●

# மண் வளத்தை அதிகரிக்க கோடை உழவு

**முனைவர். த. பிரதீஸ் குமார்**
மற்றும் **முனைவர் ஜெ. ராம்மோகன்**
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி

விவசாயிகள் கோடை உழவு மேற்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். வெப்ப மண்டலத்தில் உள்ள நம் புவியானது, கோடைக் காலத்தில் மேல்மண் அதிக வெப்பமடைகிறது.

இந்த வெப்பமானது கீழ்ப்பகுதிக்குச் செல்லும்போது நிலத்தடி நீர் ஆவியாகி வெளியேறிவிடும். எனவே, மேல் மண்ணை உழுது ஒரு புழுதிப்படலம் அமைத்துவிட்டால் விண்வெளிக்கும் வேர் சூழ் மண்டலத்துக்கும் தொடர்பு அறுந்துவிடும். இதனால் நிலத்திலுள்ள ஈரம் ஆவியாகாமல் இப்புழுதிப் படலம் தடுத்துவிடும்.

கோடை மழையைப் பயன்படுத்தி நிலத்தை நன்கு உழுவதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. கோடை உழவால் மேல் மண் துகள்களாகிறது. இதனால் மண் வெப்பத்தை உறிஞ்சி விரைவில் குளிர்ந்துவிடும். இதனால் நிலத்தில் நீர் இறங்கும் திறன் உயரும். மண்ணில் நல்ல காற்றோட்டம் கிடைக்கிறது. வயலிலுள்ள களைகள், குறிப்பாக கோரை போன்றவை கோடை உழவு செய்வதால் மண்ணின் மேற்பரப்பிற்குக் கொண்டு வரப்பட்டு சூரிய வெப்பத்தால் உலர வைத்து அழிக்கப்படுகின்றன. கோரைக்



கிழங்குகளைக் கைகளால் சேகரித்தும் அழிக்கலாம்.

நிலத்தின் அடியில் உள்ள தீமை செய்யும் பூச்சிகளின் கூண்டுப் புழுக்கள் கோடை உழவு செய்வதால் வெளியில் கொண்டு வரப்பட்டு வெயிலில் காயவைக்கபட்டு அழிக்கப்படுகின்றன. பறவைகள் அவற்றை உண்டு, கூண்டுப் புழுக்களை அழிக்கின்றன.

அறுவடை செய்யப்பட்டுள்ள வயல்களிலுள்ள முந்தைய பயிரின் தாள்கள், வேர்கள், தட்டைகள் போன்றவை கோடை உழவின்போது மடக்கி விடப்படுவதால் மண்ணின் அங்ககச் சத்து அதிகரிக்கிறது. இதனால் மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடு மேம்படுகிறது. இதனால் மண்வளம் மேம்படுகிறது.

கோடை உழவைச் சரிவுக்குச் குறுக்கே செய்தல் வேண்டும். அதனால் மண்ணரிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. கோடை உழவு செய்யாத நிலத்தில் மழை

பெய்கிறபோது அம்மழை நீரானது வேகமாக வழிந்தோடி மண்ணரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கோடை உழவு செய்வதால் மழைநீர் வழிந்தோடி வீணாகாமல் நிலத்துக்குள் எளிதாகபுகுந்து சேமிக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் உயரும். எனவே, உழவர்கள் தங்கள் பகுதியில் பெய்யும் கோடை உழவு செய்து மண்வளம், நீர்வளத்தைப் பெருக்கிட வேண்டும். ●

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் – ஒரு பார்வை

**கா. காளிதாஸ், ர. ஹரிஷ்**
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், பொள்ளாச்சி

முதலிட்டாளர்கள், வேளாண் விளை பொருட்களை வாங்குவதற்கு அதிக முனைப்பு காட்டும் அதே சமயம் விவசாயிகள் வேளாண்மையை விட்டு வெளியேறுவது ஏன்? நுகர்வோரின் வாங்கும் திறன் அதிகரிப்பதால் காய், கனி மற்றும் வேளான் விளை பொருட்களை விற்க நகரமெல்லாம் பெரு அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்கள் அதிகரித்து கொண்டிருக்கற சூழலில் விவசாயிகளின் கடன் சுமை அதிகரித்துக் கொண்டிருப்பது ஏன்? உணவுத் தேவை அதிகரித்துவரும் இவ்வேளையில் விவசாயி ஏன் விழி பிதுங்கி நிற்க வேண்டும்? இவை அனைத்திற்கும் ஒரே பதில்தான். நுகர்வோர் தரும் விலையில் ஐந்தில் ஒரு பங்கே விவசாயிக்கு கிடைக்கிறது. அழியும் தன்மை கொண்ட தானியம், பயறு, காய், கனி, மலர்களை விவசாயி சேமித்து வைக்கவும் முடியாமல், பதப்படுத்தவும் இயலாமல் போவதால் கேட்ட விலைக்கு விற்க வேண்டிய துர்பாக்கியம். இதனை சீர்படுத்த என்னதான் வழி ?

பதப்படுத்தும் தொழிற்சாலைகள் எல்லாம் விவசாயிடமிருந்து நேரடியாக வாங்குவதை விட, ஒன்று சேர்த்து தருவித்து தருகின்ற முகவர்களையே நாடுகிறார்கள். எனவே விவசாயிகள் ஒன்று சேர்த்து, சந்தையில் விரும்ப்பபடுகிற ஒரே பயிர் இரகத்தை அதிக பரப்பில் ஒரே சமையத்தில் பயிரிட்டு, தரம் பிரித்து அதிக அளவு விற்பனைக்கு தயார் செய்தால் மட்டுமே தொழிற்சாலைகளோடும், பெருநிறுவனதோடும் தொடர்பு வைத்து நேரடி வணிகம் செய்யமுடியும். இதை உக்குவிக்கின்ற வகையில் மத்திய அரசு கம்பெனின் சட்டத்தில் (1956) ஒரு சட்டத் திருத்தம் செய்தது''. உழவர் உற்பத்தியாளர் கம்பெனி " என்ற புதிய கம்பெனி அமைப்பினை உருவாக்கிக் கொள்ள அனுமதித்தது. இது விவசாயிகளால் விவசாயிகளுக்கு உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

**உழவர் உற்பத்தியாளர் கம்பெனி என்றால் என்ன?**

விவசாயிகளை அல்லது உற்பத்தியாளர்களை மட்டும் பங்குதராகளாக கொண்டு உற்பத்தி செய்பவர்களையே வணிகர்களாக மாற்றி, நுகர்வோர் தரும் தொகையில் 60-80 சதம் விவசாயிக்கு கிடைக்க வழிவகை செய்கிறது. கேரளாவில் ''இந்தியன் இயற்கை வேளாண்மை உற்பத்தியாளர் கம்பெனி லிட்'', தான் இந்தியாவில் முதல் முதலில் தொடங்கப்பட்ட உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும். ஆழுவா எனும் நகரில் இது செயல்பட்டு வருகிறது. இயற்கை முறை வேளாண்மையை பின்பற்றி அங்கக சான்றிதல் பெற்ற பண்ணை விவசாயிகள்

இக் கம்பெனி பங்குதாரர்கள் ஆவர் . இன்று ஒரு பங்கின் விலை ரூ 40,000 ஆகும். ஒரு விவசாயி எதனை பங்கு வேண்டுமானாலும் பெற்று கொள்ளலாம். அனால் ஓட்டுரிமை ஒன்று மட்டுமே உண்டு . எந்த அளவுக்கு பங்கு வைத்திருகிறார்களோ அந்த அளவுக்கு மட்டுமே அவர் விலை பொருட்களை விற்பனை செய்ய முடியும். பண்ணைனுடைய மண் , மட்டும் நீர் ஆய்வுகளை நடத்தி அறிக்கை கொடுப்பதும், சந்தை நிலவரங்ககளை தெரியபடுத்துவதும், விலை பொருட்களை தனி முத்திரையுடன் வியாபாரம் செய்வதும் கம்பெனியுனுடைய முக்கிய செயல்பாடு ஆகும். வெண்ணிலா இந்தியா உற்பத்தியாளர் கம்பெனி லிட் நிறுவனம் உறுப்பினர்களிடமிருந்து வெண்ணிலா காய்களை வாங்கி பதப்படுத்தி விற்று நல்ல விலையை பெற்று வெண்ணிலா விவசாயிகளுக்கு வழங்குகிறது . வாழை இந்தியா உற்பத்தியாளர் கம்பெனி லிட் , இந்திய வாழை வகைகளை உலக சந்தையில் விற்பதற்காக முயற்சிகளை செய்து வருகிறது. மேலும் பல உற்பத்தியாளர் நிறுவனங்கள் விதை, தானியம், அரிசி, தக்காளி, மிளகாய், உருளைக்கிழங்கு, இஞ்சி, மஞ்சள், பட்டானி, கரும்பு, கொத்தமல்லி, பால், உயர் உரங்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்கள் .

**சிறப்பு ஊக்க அறிவிப்புகள் :**

- ❖ நபார்டு வங்கியின் மூலம் உற்பத்தியாளர் அமைப்பு தொடங்க அனுமதி அளித்துள்ளது.
- ❖ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (அ) கம்பெனி லிட் உருவாக்குவதற்கான நெறி மற்றும் வழி காட்டுதல் கொள்கை அறிவிப்பு வெளிடப்பட்டது
- ❖ ஈடு இல்லாத கடன் பெரும் சலுகை , வாங்கிய கடனுக்கு (1 கோடிக்கு மிகாமல்) இழப்பு ஏற்படும் பட்சத்தில் 85 சதவீத மத்திய அரசு உத்தரவாதம் அளிக்கும் திட்டம் .
- ❖ மத்திய அரசு ஒவ்வொரு 1000 உழவர்களை பங்குதாரர்களாக கொண்ட உழவர் உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு ரூ .10 லட்சம் பங்களிப்பாக வழங்கும் திட்டம் .
- ❖ மத்திய அரசின் அனைத்துத் திட்டங்களும், உழவர் உற்பத்தியாளர் நிரறுவனங்களும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற கொள்கை முடிவு .

**சிறப்பு அம்சங்கள் :**

- ❖ உழவர் உற்பத்தியாளர் கம்பெனி கூட்டுறவு அமைப்புக்கு இணையானதாக அரசு அறிவுத்துள்ளது .
- ❖ அனைத்து இடு பொருட்களை உற்பத்தி செய்யவும் வணிகம் செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ வேளாண் சந்தை குழுவின் சட்டதிலிருத்து விளக்கு அளிக்கப்பட்டுள்ளது .
- ❖ உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் விளைபொருட்களை கொள்முதல் செய்யும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனமாக உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது .
- ❖ அனைத்து வகை நிதி நிறுவனங்கலிருந்தும் செயல்நிதி, சேமிப்பு கிடங்கு நிதி, உட் கட்டமைப்பு நிதி, பெறத் தகுதி பெற்றது .
- ❖ மாநில அரசின் சட்டத்தின் மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை மேலும் வலுபடுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது .

# "உழவர் சிந்தனை களஞ்சியம் துவக்க விழா"

மணக்கடவு, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் "உழவர் சிந்தனை களஞ்சியம் துவக்க விழா" 09.07.2016 அன்று காலை 10 மணி அளவில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்களின் செயலர் பேராசிரியர் சி. இராமசாமி தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இயற்கை வேளாண் விஞ்ஞானி திரு. மதுராம கிருஷ்ணன் அவர்கள் ''தென்னையில் மதிப்பு கூட்டுதல்'' பற்றிய தலைப்பில் விவசாயிகளிடையே கலந்துரையாடினார்.

மேலும் உழவர் சிந்தனை களஞ்சியத்தின் முதல் புத்தக பிரதியினை தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. T.A. கிருஷ்ணசாமி கவுண்டர் ஐயா அவர்கள் வெளியிட, திருமூர்த்தி மலை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் திரு. பரமசிவம், பசுமை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் திரு. திருவேங்கடம், சேரன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் திரு. ராதாகிருஷ்ணன், முன்னோடி விவசாயிகளான ஒடையகுளம் ஓ.வி.ஆர் சோமசுந்தரம், கஞ்சம்பட்டி திரு. பாலச்சந்திரன், வடக்கிபாளையம் முனைவர் ஜெயராமன், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் எம். பாலுசாமி ஆகியோர் பெற்று கொண்டனர்.

முன்னதாக வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் எம். சேவியர் பால்ராஜ் அனைவரையும் வரவேற்றார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னோடி விவசாயிகள் சுமார் 250 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ●



# "வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் முதலாமாண்டு இளநிலை வேளாண்மை துவக்க விழா."

பொள்ளாச்சி, மணக்கடவில் உள்ள வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் 01.08.2016 திங்கள் அன்று பிற்பகல் 2.00 மணியளவில் 3.30 மணி வரை முதலாமாண்டு இளநிலை வேளாண் மாணவ மாணவியருக்கான துவக்க விழா நடைபெற்றது.



வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர் திரு. தரணிபதி ராஜ்குமார் அவர்கள் தலைமை தாங்கினார்.

என்.ஐ.ஏ கல்வி நிறுவனங்களின் செயலர் பேராசிரியர் சி. இராமசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.



இவ்விழாவிற்கு திரு. கார்த்திகேய சிவசேனாபதி, சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் திரு. S. ஜெயராமன், சேலம் மாவட்ட விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

கல்லூரி தாளாளர் திருமதி. K. கற்பகவள்ளி வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் M. பாலுசாமி கல்லூரி அறிக்கையை வாசித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை முனைவர் செ. ரமேஷ்குமார், மாணவர் மன்ற ஆலோசகர் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர். ●

# உழவர் சிந்தனைக் களஞ்சியம்

## (விவசாயிகள் கூட்டம்)

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

இத்தலை சிறந்த உழவுத் தொழிலை மேலும் மேம்படுத்து வதற்காகவும் உழவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும் "உழவர் சிந்தனைக் களஞ்சியத்தின்" இரண்டாவது கூட்டம், 26.08.2016 அன்று வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் முனைவர் கே. தியாகராஜன் (பேராசிரியர்), முனைவர் சீனிவாசன் உதவி பேராசிரியர் (பூச்சியியல் துறை), தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆழியார், முனைவர் சி. கிருஷ்ணமூர்த்தி (உதவி பேராசிரியர்) ஆகியோர் பங்கேற்றனர். இதில் பல உழவர்களும் பங்கேற்றனர். முனைவர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனது உறையில் கூறியதாவது - தென்னை என்பது "கற்பக விருட்சம்" ஆகும். இதன் தாயகம் அமேசான் காடுகளாகும். அங்கிருக்கும் தட்பவெட்பநிலை நம் பொள்ளாச்சியோடு ஒத்துப்போவதால் தான் இங்கு தென்னை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தென்னங்கன்றுகள் வாங்கும் போது அக்கன்றுகள் 9-12 மாதம் உள்ளதாகவும், தண்டு 10-12 செ.மீ அளவும் இருப்பதே உகந்தது என்றார். மேலும் அவர் தென்னையில் நடவு முறைகள் பற்றியும் உரமேலாண்மை பற்றியும் விளக்கிக் கூறினார். தென்னைக்கு வேப்பம் புண்ணாக்கு (5 கிலோ) மிகவும் அவசியம் என்றும் கூறினார். ஊட்டச்சத்து, நீர்



மேலாண்மை, நுண்ணூட்டச்சத்து போன்றவற்றை பற்றி கூறுகையில், நுண்ணூட்டச்சத்தின் குறைபாடால் ஏற்படும் அறிகுறிகள் குறித்தும், அவற்றை கண்டறிவதற்கான முறைகளை பற்றியும் கூறினார். தென்னையில் நெட்டை இரகமான வேப்பங்குளம் - 3, வறட்சியைத் தாங்கும் என்றும் இதனால் கொப்பரையும் நன்றாக இருக்கும் என்றும், ஆழியார் -1 இரகம் வறட்சியைத் தாங்குவதோடு நோய் எதிர்ப்பு திறனும் கொண்டது, எனவும் கூறினார். மேலும் அவர் குட்டை இரககங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். அவர் தென்னையில் களப்புக்காய்க்கான ஆராய்ச்சியும் செய்து கொண்டிருக்கிறார்.

அடுத்ததாக, முனைவர். சீனிவாசன் அவர்கள் தென்னையில் ஏற்படும் நோய்கள் பற்றியும், தென்னையைத் தாக்கும் பூச்சிகளைப் பற்றியும் அதனை கட்டுப்படுத்தும் முறைகளை பற்றியும் விரிவாக உழவர்களுக்கு எடுத்துரைத்தார். தென்னையில் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி அவர்களிடம் கேட்டபோது, காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூண் வண்டு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறினார்கள். இவற்றிற்கான அறிகுறிகள் பற்றியும் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் தெளிவாகக் கூறினார். மேலும் கருந்தலைப் புழு, எரியோபைட் சிலந்திப் பூச்சி, கள்ளிப்பூச்சி, எலி, அணில் ஆகியவற்றினால் ஏற்படும் பாதிப்பை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றியும் உரையாற்றினார். மேலும் தென்னங்கன்றுகள் கிடைக்கும் இடங்களை குறித்தும் கூறினார். இது உழவர்களுக்கு பெரிதும் உபயோகமாக இருந்தது. ●



கடந்த 22.09.2016 அன்று திருவண்ணாமலை, தமிழ் நாடு அரசு வேளாண்மை துறை, விதை சான்றிதழ் துறை திருமதி. சாந்தி, உதவி இயக்குநர் (விதை தரம்), திருமதி. பாலா, உதவி இயக்கநர் (வேளாண்மை) மற்றும் திருவண்ணாமலை பகுதயை சார்ந்த சுமார் 60 முன்னோடி விவசாயிகள் வாணவராயர் வேளாண்மை கல்வ நிறுவனத்தில் அமைந்துள்ள சோலார் உலர் கலனை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை பற்றி உதவி பேராசிரியர் முத்துக்கண்ணன் மற்றும் விரிவுரையாளர் ஹரிபிரசாத் ஆகியோரிடம் கேட்டறிந்து சென்றனர்.



கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் நடைபெற்ற வேளாண்மை பட்ட படிப்பிற்கான 2016ம் ஆண்டு கலந்துரையாடலில் ஒற்றை சாரல முறையில் முதலாவதாக வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தினை தேர்ந்தெடுத்த மாணவி செல்வி. சண்முக பிரியாவிற்கு (cut off : 195) வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தின் முதன்மையர் முனைவர் பாலுசாமி கலந்துரையாடல் ஆணையனை வழங்கினார்.


கற்கும்போது அடிமையாயிருந்தால் வாழும்போது அரசனாக இருக்கலாம்.

# உழவர் சிந்தனைக் களஞ்சியத்தின் மூன்றாவது விவசாயிகளின் கூட்டம்

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் செயல்படும், ‘‘உழவர் சிந்தனைக் களஞ்சியம்’’ சார்பாக தென்னை சாகுபடியில் உயர்ந்த மகசூல் பெற உதவும் , வழி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு 21.09.2016 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது .இந்த விவசாய பயிற்சியில் தேவம்பாடிவலசு (கோபாலபுரம்) கிராமத்தில் இருந்து சுமார் இருபத்தி ஐந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக இக்கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) திரு.எம் .பாலுசாமி அவர்கள் பயிற்சியினைத் தொடக்கி வைத்து தலைமை உரை ஆற்றினார் . உழவர்கள் தென்னை சாகுபடி செய்யும் போது, தென்னையின் மகசூலை மட்டும் கருத்தில் கொள்ளாமல், ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளைக் கடைபிடித்து விவசாயத்தில் இலாபம் ஈட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



ஆனைமலை வேளாண் அலுவலர் திரு.பழனிக்குமார் தன் தொழிற்நுட்ப உரையில், தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி முறைகள், தென்னைக்கு உரமிடும்முறை, உர அளவு குறிப்பாக நுண்ணூட்டச்சத்து குறைப்பாட்டை நிவர்த்தி செய்யும் முறைகள் போன்ற மகசூலை உயர்த்தும் உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார் . தற்போது தென்னை சாகுபடிக்கு சவாலாக இருக்கும் கேரள வாடல் நோய் குறித்தும், அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் எடுத்துக் கூறினார். மேலும், பூச்சிதாக்குதல் மற்றும் நோய்கள் பரவாமல் தடுக்க விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்.

முன்னதாக கல்லூரியின் உழவர் சிந்தனைக் களஞ்சியத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர்.எம். சேவியர்பால்ராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார் .நிகழ்ச்சியின் இறுதியில் உதவிப் பேராசிரியர் சி.கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார். விவசாயிகள் கூட்டத்திற்கான சிறப்பான ஏற்பாடுகளை உதவிப் பேராசிரியர்கள் கே. காளிதாஸ், ல.சுந்தரமூர்த்தி, திருமதி .தமிழ்செல்வி மற்றும் முனைவர். என். காளீஸ்வரி அவர்களும் செய்திருந்தார்கள். ●

# வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் மாணவ / மாணவிகள் அகில இந்திய நுழைவு தேர்வில் சாதனை



இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ICAR), புது தில்லி நடத்தப்பட்ட அகில இந்திய நுழைவுத்தேர்வில் மணக்கடவு, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவன மாணவ மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

2010-14 ஆம் கல்வி ஆண்டில் இளநிலை வேளாண் படிப்பினை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் முடித்து, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் முதுநிலை படிப்பினை படித்த மாணவி செல்வி பி. கிருஷ்ணகுமாரி வேளாண் வணிக மேலாண்மை துறையில் முனைவர் பட்ட படிப்பிற்கு அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

மேலும் இக்கல்வியாண்டில் இளநிலை வேளாண் படிப்பினை முடித்த 13 மாணவர்கள் தேர்ச்சி பெற்று ஜூலை 11ம் தேதி நடைபெற உள்ள நேர்காணலில் பங்கு பெற உள்ளனர்.

இதில் செல்வன். முத்து பிரசாத் வேளாண் பொருளாதார துறையில் அகில இந்திய அளவில் 8 வது இடத்தையும், செல்வி. பிரியங்கா மற்றும் செல்வன். ஜெய்சன் வேளாண் மண்ணியல் துறையில் அகில இந்திய அளவில் முறையே 4 வது மற்றும் 6 வது இடத்தையும், செல்வன். கௌரி சங்கர் வேளாண் வணிக மேலாண்மை துறையில் ஆராய்ச்சி படிப்பில் அகில இந்திய அளவில் 13 வது இடத்தையும் பெற்றுள்ளனர்.

தேர்வில் சாதனை படைத்த மாணவர்களை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவன தாளாளர் திருமதி கே. கற்பகவள்ளி, செயலர் பேராசிரியர் சி. ராமசாமி, முதல்வர் பொறுப்பு முனைவர் கே. தியாகராஜன், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர். ●



வெற்றி என்பது நமது சிந்தனைக்குள்ளேதான் இருக்கிறது. அது புறத்தே இல்லை.

# என்.ஐ.ஏ. நிறுவனங்கள்

- ➢ நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி (1957)
- ➢ ஸ்ரீ குப்பாண்ட கவுண்டர் தொடக்கப்பள்ளி (1961)
- ➢ ஸ்ரீ குப்பாண்ட கவுண்டர் மழலையர் மற்றும் துவக்கப் பள்ளி (1963)
- ➢ மாரியம்மாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி (1978)
- ➢ திருமதி ருக்மணியம்மாள் மேல்நிலைப்பள்ளி (1991)
- ➢ திருமதி மாரியம்மாள் மழலையர் மற்றும் துவக்கப் பள்ளி (1991)
- ➢ பழனிக்கவுண்டர் மேல்நிலைப்பள்ளி (1995)
- ➢ டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி (1998)
- ➢ வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் (2007)
- ➢ அருட்செல்வர் டாக்டர் மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம் (2015)

